**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 150/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : Tr. Jeeva (Gr.I 396) |
| Father/Husband's Name | : Perumal |
| Village | : Traffic Police |
| Taluk | : Madurantakam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.10.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது மதுராந்தகம் போக்குவரத்து துறையில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 17.04.2023 அன்று செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் முதல்நிலை காவலர் எண்.396 ஆக பணிபுரிந்த போது காலை பகல் ரோந்திற்காக நானும், உதவி ஆய்வாளர், காவலர் 401 விக்னேஷ் ஆகியோர்கள் செங்கல்பட்டு பேருந்து நிலையம், குண்டூர், வேதாசலம் நகர், இராட்டிணகிணறு மற்றும் ராம்பாளையம் பகுதியில் ரோந்து பணியிலிருக்கும் போது விசாரித்து கேட்டு தெரிந்த பன்னீர்செல்வம் த/பெ. இரங்கநாதன், சாஸ்திரி நகர் என்பவர் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் காலை 11.00 மணியளவில் ராம்பாளையம் சந்திப்பில் போக்குவரத்து வாகனங்களை நிறுத்தி என்னை பார்த்தா யாருக்கும் பயமில்லையா, இங்க போறவர வண்டிகளை உடைச்சா தான் என்னை பத்திதெரியும், ஓத்தா தெவிடியா பசங்களா இனிமே நான் இந்த பக்கம் வந்தன்னா யாரும் வரகூடாது என்று அசிங்கமாக பேசினார். நானும், உதவி ஆய்வாளர் மற்றும் காவலர் ஆகியோர்கள் எதிரியை மடக்கி

பிடித்து உதவி ஆய்வாளர் கைது செய்தார். காவல் நிலையத்திற்கு 12.00 மணியளவில் எதிரியை அழைத்து வந்து வழக்கு பதிவு செய்தோம். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

எத்தனை ஆண்டுகளாக நான் செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் பணிபுரிகிறேனா என்றால் ஒரு வருட காலமாக பணிபுரிகிறேன். நான் பணிபுரிந்த வகையில் எனக்கு சரித்திர பதிவேடு குற்றவாளிகளை தெரியும் என்றால் தெரியும். எதிரி சரித்திர பதிவேடு குற்றவாளி என்று சொன்னால் சரிதான். நான் சம்பவத்தன்று பயன்படுத்திய பாக்கெட் டைரியை உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எத்தனை மணிக்கு சம்பவத்தன்று காவல் நிலையத்திலிருந்து சென்றேன் என்று கேட்டால் 09.00 மணியளவில் சென்றேன். காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடம் எத்தனை கி.மீ. தொலைவு என்றால் 3 லிருந்து 4 கி.மீ. தொலைவு இருக்கும். இருசக்கர வாககனத்தில் சென்றால் சம்பவயிடத்திற்கு எவ்வளவு நேரத்தில் செல்லலாம் என்றால் 20 நிமிடத்தில். யாரை பார்த்து அசிங்கமாக எதிரி திட்டினார் என்ற பெயர், விவரத்தை கூறமுடியுமா என்றால் நினைவில்லை. சம்பவயிடத்தில் கடைகள் இருக்கிறதா என்றால் ஒரு ஏடிஎம் மற்றும் கடைகள் உள்ளது. நான் சம்பவயிடத்திற்கு செல்லாமல் எனது மேலதிகாரிக்கு பவ்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.